**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.III, ERODE.**

| | | | |
|---|---|---|---|
| **Case No** | : CC No. **598/2024** | **Date** | : 20.11.2025 |
| **Deposition of Witness for** | : அ.சா. 1 | **Taluk** | : |
| **Name** | : வாசுதேவன் | **Calling** | : |
| **Father Name** | : கணேசன் | **Religion** | : |
| **Village** | : | **Age** | : |

**Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of** 20.11.2025

(2ம் எதிரி ஆஜர். 1ம் எதிரி ஆஜர் இல்லை, எதிரிகளின் வழக்கறிஞர் ஆஜர்.1ம் எதிரியின் சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317—ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.).

**அரசு தரப்பு முதல் விசாரணை:**

1. நான் தற்போது திருச்செங்கோடு நகர காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 22.06.2024ம் தேதி ஈரோடு குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத்துறையில் பணிபுரிந்தபோது, 22.06.2024ம் தேதி காலை 06.00 மணிக்கு ஈரோடு குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத்துறை உதவி ஆய்வாளர் திரு.மூர்த்தி அவர்களுடன் நானும் தலைமை காவலர் 1095 ரமேஷ் ஆகியோருடன் அத்தியாவசிய பண்டங்கள் கடத்தல், பதுக்கல் ஆகியவற்றை தடுக்க ஈரோடு ரங்கம்பாளையம் ரயில்வே பாலம் அருகில் கண்காணித்தபோது, இரண்டு நபர்கள் TN 39 L 9941 என்ற பதிவெண் கொண்ட பச்சை நிற ஆம்னி வேனில் அந்த இடத்தில் நிலத்திலிருந்து மூட்டைகளை எடுத்து ஆம்னி வேனில் உள்ளே வைத்து கொண்டிருந்தார்கள்.

2. சந்தேகத்தின் பேரில் விசாரிக்க வேண்டி அவர்கள் அருகில் சென்றபோது, தப்பிக்க முயற்சித்தவரை போலிஸ் பார்ட்டியுடன் பிடித்து விசாரித்தபோது, தனது பெயர் குட்டி (எ) சுதர்சன் என்றும், இன்னொரு நபர் பெயர் பூபதி (எ) பூமிநாதன் என்றும் கூறினர். மேலும் விசாரித்தபோது ஆம்னி வேனும் அங்கிருந்த 50 கிலோ எடையுள்ள21 மூட்டை ரேசன் அரிசி மொத்தம் 1050 கிலோ ரேசன் அரிசியும், குட்டி

(எ) சுதர்சனுக்கு சொந்தமானது என்று கூறினார்கள். 1050 கிலோ ரேசன் அரிசியை நாங்கள் இருவரும் சேர்ந்து ரங்கம்பாளையம், முத்தம்பாளையம், ஜீவாநகர் ஆகிய பகுதிகளில் பொதுமக்களிடம் குறைந்த விலைக்கு வாங்கி அதனை ரங்கம்பாளையம் ரயில்வே பாலம் அருகே பதுக்கி வைத்திருந்து, TN 39 L 9941 என்ற பதிவெண் கொண்ட ஆம்னி வேனில் கடத்தி சென்று மாணிக்கம்பாளையம், வீரப்பம்சத்திரம் பகுதிகளில் தங்கி வேலைசெய்யும் வேற்றுமாநில கூலி தொழிலாளர்களுக்கு கள்ளச்சந்தையில் அதிக விலைக்கு விற்க வைத்துள்ளதாகவும் கூறினார்கள்.

3. மேற்படி ஆம்னி வேனிலிருந்த 02 மூட்டையும் அந்த இடத்தில் நிலத்திலிருந்த 19 மூட்டைகளையும் சோதனை செய்து பார்த்தபோது, தமிழக அரசால் வழங்கப்படும் இலவச ரேசன் அரிசி இருந்தது. மேலும் விசாரணை செய்ததில் 21 மூட்டைகளில் 1050 கிலோ தமிழக அரசால் வழங்கப்பட்ட பொதுவிநியோகத்திட்ட ரேசன் அரிசியை வைத்திருக்க எந்த உரிமமோ, ஆவணமோ இல்லையென கூறினார்கள். காவல் உதவி ஆய்வாளர் அவர்களை கைது செய்வதற்கான காரணத்தை கூறி குட்டி (எ) சுதர்சன் , பூபதி (எ) பூமிநாதன் ஆகியோரை 22.06.2024 காலை 06.30 மணிக்கு அதே இடத்தில் வைத்து உதவி ஆய்வாளர் கைது செய்தார்.

4. குட்டி (எ) சுதர்சன் என்பவர் 22.06.2024 காலை 06.35 மணி முதல் 07.40 மணி வரை ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். அதை உதவி ஆய்வாளர் மடிக்கணினியில் தட்டச்சு செய்தார். பொது ஜனசாட்சிகள் யாரும் சாட்சியம் அளிக்க முன்வராததினால் என்னுடன் இருந்த தலைமை காவலர் 1095 ரமேஷ் என்பவரும் நானும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் குட்டி (எ) சுதர்சன் என்பவருடைய ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். இரண்டாவது கையொப்பம் தலைமை காவலர் 1095 ரமேஷ் என்பவருடையது தான். **(குட்டி (எ) சுதர்சன் என்பவருடைய ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் அ.த.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** மேற்கண்ட இருவரும் ஆஜர் செய்த TN39L9941 என்ற பதிவெண் கொண்ட ஆம்னி வேன் அதிலிருந்த 2 மூட்டை 100கிலோ ரேசன் அரிசி மற்றும் அதே

இடத்தில் நிலத்திலிருந்த 19 மூட்டை 950 கிலோ ரேசன் அரிசி மொத்தம் 1050 கிலோ ரேசன் அரிசி ஆகியவற்றை கைப்பற்றுதல் மகஜரில் 22.06.2024 ம் தேதி 07.45– 08.15 மணி வரை கைப்பற்றினார்.

5. பொதுஜனசாட்சிகள் யாரும் சாட்சியம் அளிக்க முன்வராததினால் என்னுடன் இருந்த தலைமை காவலர் 1095 ரமேஷ் என்பவரும் நானும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். இரண்டாவது கையொப்பம் தலைமை காவலர் 1095 ரமேஷ் என்பவருடையதுதான். **(கைப்பற்றுதல் மகஜரிலுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் அ.த.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் எதிரிகள் இருவர் கைப்பற்றிய சொத்துக்களுடன் 22.06.2024 காலை 09.00 மணிக்கு நிலையம் வந்து வழக்கு பதிவு செய்ய நானும் உதவியாக இருந்தேன். வழக்கு சம்பந்தமாக உதவி ஆய்வாளர் அவர்கள் 22.06.2024ம் தேதி என்னை விசாரித்தார். மேற்படி விவரங்களை நான் கூறினேன்.

**குறுக்கு விசாரணை**

1. காவல் நிலையத்துக்கு எத்தனை மணிக்கு தகவல் கிடைத்தது, நாங்கள் எத்தனை மணிக்கு மேற்படி சம்பவ இடத்திற்கு சென்றோம் என்றால் காலை 05.45 மணிக்கு தகவல் கிடைத்தது காலை 06:00 மணிக்கு நாங்கள் அங்கு சென்று விட்டோம். யார் யார் அங்கு சென்றோம் என்றால் உதவி ஆய்வாளர் மூர்த்தி, தலைமை காவலர் ரமேஷ் ஆகியோர்களுடன் நானும் சென்றேன். சம்பவ இடத்தில் நாங்கள் எத்தனை வாகனங்களை சோதனை செய்தோம் என்றால் மற்ற எந்த வாகனங்களையும் சோதனை செய்யவில்லை. தகவல் கிடைத்து சென்றதால் ஆம்னி வாகனத்தை மட்டும் சோதனை செய்தோம். சம்பவ இடமானது பொதுமக்கள் அதிகம் கூடும் பகுதி என்றால் சரிதான்.

2. கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் அரிசி ஆனது எந்த வகையான அரிசி மற்றும் அவை எந்த வகையான பைகளில் அடைக்கப்பட்டிருந்தது போன்ற விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தமிழக அரசால் வழங்கப்படும் பொது விநியோகத் திட்ட புழுங்கல் அரிசி இருந்தது மேலும் பாலிதீன் சாக்கு பைகளில் அடைக்கப்பட்டிருந்தது.

அரிசி மூட்டைகளை அந்த இடத்தில் வைத்து எடை போட்டு பார்த்தோமா என்றால் அங்கு எடை போட்டு பார்க்கவில்லை.

3. கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் அரிசி ஆனது பொது விநியோகத் திட்ட அரிசி என்று கைப்பற்றுதல் மகஜரில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல குறிப்பிடப்பட்டுள்ளது. காவல் நிலையத்தில் வைத்து தான் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டதா என்றால் இல்லை சம்பவ இடத்தில் வைத்து பதிவு செய்யப்பட்டது. ஒப்புதல் வாக்குமூலம் ஆனது எங்கு வைத்து பிரிண்ட் எடுக்கப்பட்டது என்றால் அருகில் இருந்த ஜெராக்ஸ் கடையின் போர் டை பார்த்து அதிலிருந்த செல்போன் எண்ணுக்கு அழைத்து அவரை வரவழைத்து பிரின்ட் எடுக்கப்பட்டது.

4. சம்பவ இடமான ரயில்வே பாலத்திற்கும் ரங்கம்பாளையத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 02 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். சுமார் 300 அல்லது 400 அடி தான் இருக்கும் என்றும், நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்பதால் தான் அதுபற்றி எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. மேற்படி அரிசிகள் யார் யாரிடம் இருந்து சேகரிக்கப்பட்டது என்பது குறித்து எதிரிகளை அழைத்து சென்று விசாரணை செய்தோமா என்றால் இல்லை.

5. மேற்படி வாகனத்தின் பதிவு சான்றிதழை கைப்பற்றினோமா என்றால் கைப்பற்றவில்லை. வீட்டில் இருந்த எதிரிகளை காவல் நிலையத்திற்கு வரவழைத்து புள்ளிவிவரக்கணத்திற்காக போடப்பட்ட பொய் வழக்கு என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றும் அரிசி மூட்டைகள் எதுவும் கைப்பற்ற வில்லை என்றாலும் எவ்வித ஒப்புதல் வாக்குமூலங்களும் பெறப்படவில்லை என்றாலும் சரி அல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கம் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

S R BABU

Digitally signed by S R BABU
Date: 2025.11.20 17:22:26 -0800

Judicial Magistrate No.III,

Erode.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.III, ERODE.**

| | | | |
|---|---|---|---|
| Case No | : CC No. 598/2024 | Date | : 20.11.2025 |
| Deposition of Witness for | : அ.சா. 2 | Taluk | : |
| Name | : கதிரேசன் | Calling | : |
| Father Name | : | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 20.11.2025

(2ம் எதிரி ஆஜர். 1ம் எதிரி ஆஜர் இல்லை, எதிரிகளின் வழக்கறிஞர் ஆஜர்.1ம் எதிரியின் சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.).

**அரசு தரப்பு முதல் விசாரணை:**

நான் நாமக்கல் மாவட்டம், வெப்படை எலந்தகுட்டை, லட்சுமி நகர் வெள்ளக்கல் மேட்டில் குடியிருந்து வாகன ஓட்டுனராக பணிபுரிந்து வருகிறேன். தேதி, மாதம், வருடம் ஞாபகம் இல்லை. சுமார் ஒரு வருடத்திற்கு முன்பு நானும் எனது நண்பர் கார்த்தியும் இருசக்கர வாகனத்தில் மாலை நேரத்தில் வெப்படையிலிருந்து ரங்கம்பாளையம் வந்து கொண்டிருந்தபோது, ரயில்வே பாலத்தில் நின்று கொண்டிருந்த சீருடை அணியாத போலீசார் எங்களை நிறுத்தி ஒரு வழக்கு சம்பந்தமாக கையொப்பம் செய்யும்படி கேட்டார்கள் நாங்கள் கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். இரண்டாவது சாட்சி கையொப்பம் கார்த்தி என்பவருடையதாகும். **(பார்வை மகஜர் அ.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

**குறுக்கு விசாரணை**

வெப்படையில் இருந்து ரங்கம்பாளையம் எதற்காக வந்தோம் என்றால் நண்பர்களை பார்க்க வந்தோம். நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. போலீசார் கேட்டுக் கொண்டதற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

S R BABU

Digitally signed by S R BABU
Date: 2025.11.20 17:22:35 -0800

Judicial Magistrate No.III,

Erode.